வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

FWC

## தவணைப் பரீட்சை, நவம்பர் - 2017
## Term Examination, November - 2017

| தரம் :- 12 (2019) | இலங்கை வரலாறு | மூன்று மணித்தியாலம் |
|---|---|---|

பகுதி - I

❖ எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

❖ 1 – 5 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து பெயர்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அப் பெயர்களுள் ஒன்று ஏதோ காரணத்தினால் ஏனையவற்றுடன் பொருந்தாது. பொருந்தாத அப்பெயரை இனங்கண்டு அதன் இலக்கத்தினைப் புள்ளிக்கோட்டில் இடுக.

01. 1) காவிய சேகர 2) லோவடசங்கராவ 3) கந்தவுறு சிரித்த
4) புதுகுணலங்காரய 5) குத்திலிகாவிய ( )

02. 1) சூரகதீத்த 2) ஜம்புகோளப்பட்டினம் 3) கோகர்ண
4) கச்சதீத்த 5) உருவெல ( )

03. 1) எலகர 2) பப்பதந்த 3) ஆகாச கங்கை
4) ஜய கங்கை 5) வளவை கங்கை ( )

04. 1) இந்திய 2) உத்தல 3) சம்பல
4) பத்தசால 5) மகாநாம ( )

05. 1) சிலப்பதிகாரம் 2) மணிமேகலை 3) பதிற்றுப்பத்தி
4) பட்டினப்பாலை 5) யாழ்ப்பாண வைபவமாலை ( )

❖ 6 – 10 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து சோடிச் சொற்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு நோடி ஒன்றுடன் ஒன்று பொருந்தாதுள்ளது. பொருந்தாத அச்சோடிச் சொல்லைத் தெரிந்து அதன் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

06. 1) மகாவலிகங்கை - திருகோணமலை
2) வளவகங்கை - அம்பாந்தோட்டை
3) மாணிக்ககங்கை - கிரிந்த
4) நில்வளகங்கை - காலி
5) தெதுறுஓயா - சிலாபம் ( )

agaram.lk

07. 1) நல்லூர் - யாழ்ப்பாணம்
2) திருக்கேதீஸ்வரம் கோயில் - கிளிநொச்சி
3) கோணேஸ்வரம் கோயில் - திருகோணமலை
4) முன்னேஸ்வரம் கோயில் - சிலாபம்
5) பெரண்டீ கோயில் - சீதாவாக்கை ( )

08. 1) மிகிந்தலைக் குன்று சாசனம் - நான்காம் மகிந்தன்
2) அம்பகமுவ கல்வெட்டு - முதலாம் விஜயபாகு
3) தேவநகல பாறைக் கல்வெட்டு - முதலாம் பராக்கிரமபாகு
4) தம்புள்ள கல்வெட்டு - நிசங்கமல்லன்
5) கலப்பாத சாசனம் - சேனாசம்மத விக்கிரமபாகு ( )

09. 1) தேவநம்பியதீசன் - சங்கமித்த
2) மகாசேனன் - சங்கமித்தரதேரர்
3) சிறிமேகவண்ணன் - ஹேமமாலாவும் தந்தனும்
4) 1ம் உபதிஸ்ஸன் - புத்தகோஷர்
5) வலகம்பா - குப்பிக்கல மகாதிஸ்ஸதேரர் ( )

10. 1) வளைத்துபுதைத்தல் - குருவிட்ட பட்ட தொம்பலென
2) மண்டையோட்டை பிளந்து புதைத்தல் - பெலிகல
3) நிந்தீட்டி புதைத்தல் - பாகியன்கல
4) களிமண் ஓடம் - உடரஞ்சாபடம்
5) கல்லறை மயானம் - இப்பண்கட்டுவ ( )

agaram.lk

❖ **11 – 15 வரை X, Y நிரல்களில் தரப்பட்டுள்ளவற்றை தொடர்புபடுத்தும் போது வரும் சரியான சேர்மானத்தின் இலக்கத்தை அடைப்புப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

11. 1) கரிந்தி நதி - A கல்லோயா
2) கோண நதி - B வளவகங்கை
3) மகாவாலுகா நதி - C கிரிந்தி ஓயா
4) வளவாகினி நதி - D கலா ஓயா
5) கால்கநதி - E மகாவலிகங்கை

1) CEADB 2) CDEBA 3) CABEB 4) CDABE 5) CEABD ( )

12. X Y
1) றொபேர்ட் நொக்ஸ் - A இலங்கையில் உள்ள புராதன காலத்து நீர் தேக்கங்கள்
2) போப்ஸ் - B இலங்கையுடனான ஒரு வரலாற்றுத் தொடர்
3) எமேர்ஸன் ரௌன்ற் - C இலங்கையில் ஐம்பது வருடங்கள்
4) தொமஸ் ஸ்கின்னர் - D இலங்கை
5) ஆர். எல். புறோஹியர் - E இலங்கையில் பதினொரு வருடங்கள்

1) EBDCA 2) BADEC 3) CADEB 4) DBCEA 5) BEDCA ( )

13. 1) விஜயன் — A) உருகுணை
2) ராமகோனார் — B) கோகர்ண
3) மகாநாக — C) தம்பபன்னி
4) தீகாயு — D) மகாகம
5) ரோகண — E) தீகவாவி

1) ABDEC  2) CBDEA  3) ABCDE  4) ABCDE  5) AEDCB  (    )

14.

| | X | Y |
|---|---|---|
| 1) | கரையோர வெட்டவெளி | A) சிகிரிய அலிகல |
| 2) | தாழ்நில உலர்வலயக வெட்டவெளி | B) பாகியன்கல |
| 3) | தாழ்நில ஈர வலய குகை நிலம் | C) பண்டாரவல |
| 4) | தாழ்நில உலர் வலய குகை | D) மினிஹால்கந்த |
| 5) | மலைய வெட்டவெளி வேட்டை நிலம் | E) பெல்லன்பதிபெல்ஸஸ |

1) DEBAC  2) DBACE  3) BADCE  4) ABCDE  5) ACDEB  (    )

15.

| | X | Y |
|---|---|---|
| 1) | மகிந்த தேரர் | A) இலங்கையின் முதற் பிக்குணி |
| 2) | தேவநம்பிய தீசன் | B) இலங்கையின் முதல் பிக்கு |
| 3) | சங்கமித்தா | C) இலங்கையின் முதல் பௌத்த மன்னன் |
| 4) | அரிட்டன் | D) இலங்கையின் பிக்கு சாசனம் நிறுவப்பட்டமை |
| 5) | அனுலாதேவி | E) இலங்கையில் பிக்குணி சாசனம் நிறுவப்பட்டமை |

1) DCEBA  2) DECBA  3) ABCDE  4) ABECD  5) DCBEA  (    )

agaram.lk

❖ ***16 – 20 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (A) (B) (C) (D) என்னும் நான்கு மாற்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று அல்லது பல சரியான விடைகளாகும். சரியான விடையை அல்லது விடைகளைத் தெரிவு செய்து.***

***(A) யும் (B) யும் மட்டும் சரியாயின் ……………… 1 எனவும்***
***(B) யும் (C) யும் மட்டும் சரியாயின் ……………... 2 எனவும்***
***(C) யும் (D) யும் மட்டும் சரியாயின் ……………... 3 எனவும்***
***(A) யும் (C) யும் மட்டும் சரியாயின் ……………... 4 எனவும்***

***ஒருவிடை மட்டும் அல்லது இரண்டுக்கு மேற்பட்ட விடைகள் சரியாயின் 5 எனவும் அடைப்புள்ளிக் கோட்டில் எழுதுக.***

16. மேல்வரும் குறிப்புகளுள் எது / எவை பண்டுகாபயனின் ஆட்சி பற்றிச் சரியானது / சரியானவை?
A) அநுராதபுரத்தை இராசதானியாக அமைத்தமை
B) சுவர்னபாலியை பண்டுகாபயன் மணம் புரிந்தான்
C) கிராமங்களின் எல்லைகள் வரையறை செய்யப்பட்டமை.
D) நுவரவாவி கட்டப்பெற்றது.  (    )

17. மேல் வருவனவற்றில் இலங்கை வரலாற்றைச் செல்வாக்குப்படுத்திய புவியியற் காரணங்கள் யாவை?

A) இலங்கை 65620 சதுர கிலோமீற்றர் புவியியற் பரப்பளவு கொண்ட ஒரு தீவாகும்.

B) அது இந்தியாவிலிருந்து வேறுபடுத்தப்பட்ட ஒரு தீவாக அமைந்திருப்பதால் தனக்கென்று தனியான நாகரிகத்தை வளர்த்துக்கொள்ள முடிந்தது.

C) இலங்கை இந்தியாவிற்கு மிக அண்மையில் இருப்பதால் அதன் பண்பாட்டில் இந்தியச் செல்வாக்குகளைக் காண முடிகிறது.

D) இலங்கை இந்து சமுத்திரத்தின் நடுவில் அமைந்திருப்பதால் கிழக்கு மேற்கு வாணிபத்தில் அது ஒரு முக்கியமான மையப்பகுதியாகும். ( )

18. மேல் வருவனவற்றில் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் தொடர்பான சரியான கூற்றுக்கள்

A) வரலாற்றுக்கு முற்பட்ட காலம் பிளைத்தோஸின் எனும் புவியிற் காலகட்டத்துடன் தொடர்புள்ளது.

B) வரலாற்றுக்கு முற்கால மக்கள் நாடோடிகளாக வாழ்ந்தனர்

C) வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தை வரலாற்று அறிஞர்கள் இரும்பு யுகம் என அழைப்பர்

D) வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் சுடப்பட்ட மண் பாத்திரங்கள் பயன்படுத்தினார். ( )

19. இரணைமடு படிவுகள் தொடர்பாக மேல்வரும் குறிப்புக்களில் எது / எவை சரியானது / சரியானவை

A) கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களை இரணைமடு குளம் பிரிகின்றது.

B) இரணை மடுக்குளத்தின் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட சரளை கல்லினை படிவுகளுக்கு இப் பெயர் வழங்கப்படுகின்றது.

C) இரணைமடு படிவுகள் இலங்கையின் இரத்தினபுரி மாவட்டத்தில் அதிகம் காணப்படுகின்றன.

D) இரணைமடு படிவுகள் இலங்கையின் வன்னி மாவட்டத்தில் மாத்திரம் காணப்படுகின்றன. ( )

20. இலங்கையின் ஏற்பட்ட ஆதியான குடியிருப்புக்களைப் பற்றிய மேல்வரும் குறிப்புகளில் எது / எவை சரியானது / சரியானவை?

A) இந்தியாவில் பல பாகங்களில் இருந்தும் வந்தவர்களினால் ஆதிகாலக் குடியிருப்புகள் ஏற்படுத்தப்பட்டன.

B) ஆரம்பகாலக் குடியிருப்புகள் ஆற்றங்கரைகளில் அமைக்கப்பட்டன.

C) பண்டுகாபயனுடைய ஆட்சியில் முதலாவது குடியிருப்பு ஏற்படுத்தப்பட்டது

D) மிகவும் புராதன காலத்தில் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் வாணிப தொடர்புகள் எதுவும் இருக்கவில்லை. ( )

agaram.lk

## பகுதி II

❖ **முதலாம் வினா கட்டாயமானது. அது தவிர விரும்பிய ஒரு வினாவிற்கு விடை தருக.**

01. மேலே தரப்பட்ட இடங்கள் எல்லாவற்றையும் உமக்கு வழங்கப்பெற்ற இலங்கை புறவுருவப்படத்திலே குறித்து பெயரிட்டு அவற்றுள் எவையேனும் இரண்டினைப் பற்றிச் சுருக்கமான வரலாற்றுக் குறிப்புகள் எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| 1) நாகதீப | 2) உருவெல | 3) கோணநதி | 4) கதம்ப நதி |
| 5) நாச்சதுவ வாவி | 6) வளவைகங்கை | 7) காலி | 8) கிழக்கு மாகாணம் |

(சரியாகக் குறித்துக் கொள்வதற்கு 01 புள்ளி, சிறு குறிப்பு ஒவ்வொன்றிற்கும் 05 புள்ளிகள்)

02. வரலாற்று மூலாதாரம் என்ற வகையில் மகாவம்சத்தின் முக்கியத்துவத்தை விளக்குக.

(12 புள்ளிகள்)

03. கி.பி முதலாம் நூற்றாண்டு வரை இலங்கையில் பரவலாக ஏற்பட்ட குடியிருப்புகள் புவியியல் காரணிகள் வயமானவை?

i) ஆதிக் குடியிருப்புகளை ஏற்படுத்திய இரண்டு சிற்றரசர்களின் பெயர்களைக் குறிப்பிடுக?

(2 புள்ளிகள்)

ii) ஆதிக் குடியிருப்புகள் பரவிய இரண்டு ஆற்றுப் பள்ளத்தாக்குகளைக் குறிப்பிடுக?

(2 புள்ளிகள்)

iii) ஆதிக் குடியிருப்புகள் ஏற்பட்டமை பற்றி ஒரு சுருக்கமான விளக்கவுரை எழுதுக.

(2 புள்ளிகள்)

iv) ஆதிக் குடியிருப்புகள் பரவியமையில் புவியியற் காரணிகள் எவ்வகையிலே செல்வாக்குப்படுத்தின என்பதைப் பரிசீலனை செய்க.

(6 புள்ளிகள்)

agaram.lk

04. மேல்வரும் விடயங்களை தொடர்புபடுத்தி வரலாற்றுக்கு முற்பட்ட காலம் தொடர்பான விடயங்களை பரிசீலனை செய்க.

1) வாழ்க்கை முறை
2) தொழில் நுட்பம்
3) உணவு பழக்கம்

(4X3=12 புள்ளிகள்)